DINAKARAN 11 DEC 2007

# எய்ட்ஸ் பாதித்தோர் வாழ்வுரிமை மாநாடு

சத்தியமங்கலம்,டிச.11: சத்தியமங்கலத்தில் எய்ட்ஸ் பாதித்தோர் வாழ்வுரிமை மாநாடு நடந்தது. எம்எல்ஏ தர்மலிங்கம் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார்.

ஹில்ஸ் சமூக சேவை நிறுவன நிறுவனர் சந்திரசேகர் வரவேற்றார். நகர மன்ற தலைவர் வேலுச் சாமி, மாவட்ட விற்பனை குழு தலைவர் தேவராஜ், ஒன்றியக்குழு துணைத் தலைவர் சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

ஈரோடு வழக்கறிஞர் பார்பராலிடியா பேசுகையில், எச்.ஐ.வி. பாதித்த நோயாளிகளுக்கு இலவச சட்ட உதவி வழங்க தயாராக இருக்கிறேன்' என்றார்.

ஈஷா யோகா மையம் சார்பில் டாக்டர்கள் கிருஷ்ணமூர்த்தி, ஆஷா ஆகியோர் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு யோகா பயிற்சி அளித்து அறிவுரை வழங்கினர்.

கணக்கம்பாளையம் மக்கள் நல சங்க செயலாளர் டாக்டர் நடராஜன், ஈஷா யோகா மையம் சார்பில் விஜயகுமார், கோபி அரசு மருத்துவமனை சார்பில் பாக்யராஜ், பாலாஜி, ஆனந்தன் ஆகியோரும் பல்வேறு அறிவுரைகளைக் கூறினர்.

சத்தியமங்கலம், கோபி, பாலாஜி, தாளவாடி, தாராபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட எய்ட்ஸ் நோய் பாதித்தவர்கள் கலந்து கொண்டனர்.

பல பெண்கள், குழந்தைகளுடன் வந்திருந்தனர். அனைவருக்கும் இலவச பழமரக் கன்றுகளை எம்எல்ஏ தர்மலிங்கம் வழங்கினார்.



சத்தியமங்கலத்தில் நடந்த எய்ட்ஸ் பாதித்தோர் வாழ்வுரிமை மாநாட்டில் பங்கேற்றோருக்கு இலவச பழ ம கன்று களை எம்.எல்.ஏ தர்மலிங்கம் வழங்கினார்.